**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 10 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டுதல் – நிர்வாக அனுமதி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை**

**அரசாணை(நிலை) எண்:19** **நாள் : 05.02.2021.**

திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, தை 23–ஆம் நாள்.

படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் கடித
ந.க.எண்.த3/7807/ 2020, நாள். 08.05.2020.

-----

**ஆணை :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2020–2021–ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

"**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 10 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும்**".

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல ஆணையர், மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்திட வேண்டியது மிகவும் அவசியமாகிறது எனவும், மாணவியர்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை அமைப்பதும், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில சாலைகளின் அருகில் அமைந்துள்ள விடுதிகளில் தங்கியுள்ள மாணவியர்களின் பாதுகாப்பிற்கு சுற்றுச் சுவர் கட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது எனவும் தெரிவித்து தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து 2020–2021–ஆம் ஆண்டு பொதுப் பணித்துறை செந்தரவிலைப் பட்டியலின் (Schedule of Rates) அடிப்படையில், தயார் செய்து பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி கீழ்க்காணும் சுற்றுச் சுவர் இல்லாத 10 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்ட நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் செய்து ஆணை பிறப்பிக்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

| வ. எண். | மாவட்டம் | விடுதியின் பெயர் |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கல்லூரி மாணவியர் விடுதி, வால்பாறை |
| 2. | காஞ்சிபுரம் | பள்ளி மாணவியர் விடுதி, தையூர் |
| 3 | சேலம் | கல்லூரி மாணவியர் விடுதி, தலைவாசல் (வட சென்னிமலை) |
| 4 | சேலம் | பள்ளி மாணவியர் விடுதி, தலைவாசல் |

| | | |
|---|---|---|
| 5 | சேலம் | பள்ளி மாணவியர் விடுதி. கொளத்தூர் |
| 6 | திருச்சி | பள்ளி மாணவியர் விடுதி. கொளக்குடி |
| 7 | விழுப்புரம் | பள்ளி மாணவியர் விடுதி. நாகலூர் |
| 8 | கன்னியாகுமரி | பள்ளி மாணவியர் விடுதி. மார்த்தாண்டம் |
| 9 | கன்னியாகுமரி | பள்ளி மாணவியர் விடுதி, திங்கள் சந்தை |
| 10 | கரூர் | பள்ளி மாணவியர் விடுதி. எலவானூர் |

3. ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து ஆதிதிராவிடர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு மேலே பத்தி 2–இல் காணும் 10 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்காக ரூ.1,00,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ. சா. கு. எண். 4618/ 2020/ நிதி (ஆதி(ம)பந) / 2020, நாள்.03.02.2021–இல்பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஓட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்:**
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 600 005.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
பட்டி/சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை – 600 008.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர்(ஆதி(ம)பந)அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதி(ஆதி(ம)பந)துறை, தலைமைச் செயலகம், சென்னை –600 009.
நிதி (வ.செ.பொI/II/வ.வ I )துறை
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச்
செயலாளரின் தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்( ஆதிந.4 /ஆதிந5/பமே1/அநமு) துறை,
சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

06.02.21